# சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

**அ.வ எண்: 231/2024 (வாசா.1 – மதன்மோகன்) தேதி: 07.02.2026**

**வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 12, 14, 15, 17,21,28, 33,34,46,47, 56, 58, 61 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

உறவின் முறை சங்க தேர்தல் 2022ம் வருடம் நடந்தது. சங்க தேர்தல் முடிவு எந்த வருடம் வெளியிடப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. உறவின் முறை சங்க தேர்தல் நடைபெற்று 2 வருடங்கள் கழித்துதான் அந்த தேர்தல் முடிவு வெளியிடப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த 2 வருட காலத்திற்குள் உறவின்முறை சங்க தேர்தல் செல்லாது என எந்த நீதிமன்றத்திலும் நாங்கள் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தை எனது தாய் மாமா என்னிடம் வழங்கினார். வா.சா.ஆ.5 அடிப்படையில்தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். எனது தாய்மாமா பெயர் எம். இளங்கோ. வா.சா.ஆ.5 ஆவணம் இந்த வழக்கிற்காக பொய்யாக புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தை நிருபணம் செய்ய எனது தாய்மாமாவையோ அல்லது அதில் கையொப்பம் செய்த செயலாளரையோ சாட்சியாக விசாரிக்க வேண்டும் என்றால் அதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. தேர்தல் நடைமுறைகள் செல்லாது என பரிகாரம் கோரியுள்ள நிலையில் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் அனைவரையும் தரப்பினர்களாக சேர்க்காததால் இந்த வழக்கு பாதிப்படைந்துள்ளது என்றால் சரியல்ல. கோவில்பட்டி நாடார் உறவின்முறை சங்கம் இந்த வழக்கில் அவசிய தரப்பினர் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தேவையான தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால்

பாதிப்படைந்துள்ளது என்றால் சரியல்ல. 67 பிரதிவாதியான தேர்தல் அலுவலர் அவரது சொந்த விருப்பத்தின் பேரில் அவருக்கு உதவியாக வழக்கறிஞர்களை நியமித்து கொண்டார் என்றால் சரிதான். தேர்தலுக்கு வாக்களிக்க வந்த உறுப்பினர்கள் அனைவரது அடையாள அட்டையும் சரிபார்க்கபட்டுதான் பின்னர் அவர்கள் வாக்களித்தார்கள் என்றால் 2 நபர்கள் அடையாள அட்டை இல்லாமல் வாக்களிக்க வந்தார்கள் அவர்களை நாங்கள் வெளியே அனுப்பிவிட்டோம். அவர்கள் மீது புகார் கொடுக்கப்பட்டு மனு ரசீது வழங்கப்பட்டதாக நான் கூறும் நிலையில் அந்த மனு ரசீது இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வாக்காளர்கள் அனைவரது அடையாள அட்டையும் முறையாக சரிபார்க்கப்பட்டுதான் அவர்கள் ஓட்டுபோட்டார்கள் என்றால் சரியல்ல. 1ம் வாதி மதிவானனின் சகோதரர் சீனிவாசன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. உறவின்முறை சங்கத்திற்கு பாத்தியப்பட்ட கல்வி நிறுவனங்களில் சங்கத்து உறுப்பினர்களின் உறவினர்களும் பணிபுரிந்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி உறவினர்களை வைத்து தேர்தல் நடைமுறைகள் நடைபெற்றால் அதில் பாரபட்சம் நடைபெற வாய்ப்பு உள்ளது என்பதை உயரிய கருத்துடன் 67ம் பிரதிவாதி சங்கத்து உறுப்பினர்கள் இல்லாத வழக்கறிஞர்களை வைத்து தேர்தலை நடத்தினார் என்றால் சரியல்ல. சங்க தேர்தல் முறைப்படி நடந்தது என்றாலும் நான் சங்க தேர்தலில் கலந்து கொண்டு தற்பொழுது அதற்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தேர்தல் நடைமுறைகளை உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொண்டு தேர்தல் முடிவுகளை வெளியிட

உத்தரவு வழங்கியுள்ளது என்றாலும் அந்த உத்தரவிற்கு விரோதமாக இந்த வழக்கை நாங்கள் தாக்கல் செய்ய முடியாது என்றாலும் சரியல்ல. எங்கள் வழக்கு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி: 67 வது பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.